දුරකථන ) 2698475
தொலைபேசி ) 2698490
Telephone ) 2698507

ෆැක්ස් ) 2692913
பெக்ஸ் ) 2693869
Fax )

විද්‍යුත් තැපෑල )
மின்னஞ்சல் முகவரி ) postmaster@health.gov.lk
e-mail )

වෙබ්අඩවිය )
இணையத்தளம் ) www.health.gov.lk
website )

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

මගේ අංකය )
எனது இல ) NCCP/ADM/26/2017
My No. )

ඔබේ අංකය )
உமது இல )
Your No. : )

දිනය )
திகதி ) 24 /11/2018
Date )

# සෞඛ්‍ය, පෝෂණ හා දේශීය වෛද්‍ය අමාත්‍යාංශය
# சுகாதாரம், போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு
# Ministry of Health, Nutrition& Indigenous Medicine

பொது சுற்றறிக்கை இலக்கம் : 01-54 /2018

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் அனைவருக்கும்,

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் அனைவருக்கும்,

திணைக்களத் தலைவர்கள்/ மாவட்ட சுகாதார அதிகாரிகள்/ கடமைக்கு பொறுப்பான மருத்துவ அதிகாரிகள் அனைவருக்கும்,

மருத்துவ அதிகாரிகள் (தாய் சேய் சுகாதாரம்)/ மருத்துவ அதிகாரிகள் (தொற்றாத நோய்கள்),

பிராந்திய பல் அறுவை சிகிச்சை மருத்துவர்கள் அனைவருக்கும்,

சுகாதார மருத்துவ அதிகாரிகள் அனைவருக்கும்,

**ஆரம்ப வாய் புற்றுநோய் நிலை மற்றும் வாய் புற்று நோயிற்கான அதிக வாய்ப்புள்ள நபர்களை ஆரம்பத்தில் கண்டறிவதற்கான பரிசோதனை நிகழ்ச்சித் திட்டம்:**

**ஆரம்ப வாய் புற்றுநோய் நிலை மற்றும் வாய் புற்று நோயிற்கான அதிக வாய்ப்புள்ள நபர்களை இனங்காணல் மற்றும் சிகிச்சைகளுக்கு அனுப்புதல் என்பவற்றுக்காக குடும்ப நல சுகாதார சேவைகள் அலுவலர்களின (Midwives) மற்றும் பொது சுகாதார பரிசோதகர்களின (PHI) சேவையினைப் பெற்றுக் கொள்ளல்.**

வாய் புற்றுநோயாக பொதுவாக கருதப்படுவது உதடு, வாய்வழி குழி மற்றும் தொண்டை அண்மித்த இடங்களில் ஏற்படுகின்ற தோலிழம கலம் சார்ந்த புற்றுநோய் நிலையை குறிக்கின்றது. 2011 ஆம் ஆண்டிலே இலங்கையில் இனங்காணப்பட்ட புதிய புற்று நோயாளர்கள் பற்றிய தரவுகளின் பிரகாரம், வாய் புற்றுநோயாளர்களில் 16.4% உதடு, வாய்வழி குழி மற்றும் தொண்டையை அண்மித்த புற்று நோய்களாக காணப்படுவதுடன், அவை ஆண்களிடையே பொதுவாகக் காணப்படுகின்றன. 2011 ஆம் ஆண்டிலே ஆண்கள் மத்தியில் புதிதாக கண்டறியப்பட்ட புற்று நோய்களில் 24% உதடு, வாய்வழி குழி மற்றும் தொண்டையை அண்மித்த புற்று நோய்களாகக் காணப்படுகின்றன.

வாய் புற்று நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக எவ்வளவு பல நவீன சிகிச்சை முறைகள் காணப்பட்ட போதிலும், வாய் புற்று நோயாளர்களுக்கு சிகிச்சை அளித்ததன் பின்னர், அதில் 50% ஆனவர்கள் மாத்திரமே **5** வருடங்கள் வரையில் உயிர் வாழுகின்றனர். அனைத்து விதமான புற்றுநோய் வகைகளிலும் உயர் மரண வீதத்தை (நாளொன்றுக்கு 3 மரணங்கள்) வாய் புற்று நோயாளர்கள் கொண்டுள்ளனர். இதற்குரிய பிரதான காரணம் வாய் புற்று நோயாளர்கள் நோய் தன்மையின் இறுதிக் கட்டத்திலேயே சிகிச்சை பெறுவதற்காக வருகை தருகின்றமையாகும்.

தேசிய புற்றுநோய் ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் வெளியிடப்பட்ட 2011 ஆம் ஆண்டிற்கான தரவுகளின் மூலம் இந்நிலையானது நன்கு புலப்படுகின்றது. அந்த அறிக்கையின் பிரகாரம் வாய் புற்று நோயாளர்களில் ஏறத்தாழ 76% ஆனவர்கள் புற்றுநோயின் இறுதிக் கட்டத்திலேயே சிகிச்சை பெறுவதற்காக வருகை தந்துள்ளனர் (III, மற்றும் IV கட்டங்களில்).

புற்றுநோயை தோற்றுவிப்பதற்கான காரணிகள் தொடர்பில் போதிய விஞ்ஞான ஆராய்ச்சி ரீதியான சான்றுகள் காணப்படுகின்றன. இதன் பிரகாரம் புகையிலையுடன் அல்லது புகையிலை இன்றி வெற்றிலை சாப்பிடல், புகையிலை மற்றும் பாக்கு சார்ந்த உற்பத்திகளின் பாவனை, புகை பிடித்தல் மற்றும் மது பாவனை உள்ளிட்ட பழக்கங்கள் வாய் புற்று நோயிற்கான பிரதான காரணிகளாக இனங்காணப்பட்டுள்ளன. இலங்கை மக்களிடையே மேற்படி பழக்கங்கள் அதிகம் காணப்படுவது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

2002/2003 ஆண்டு காலப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட தேசிய வாய் புற்றுநோய் தொடர்பான கணக்கெடுப்பின் பிரகாரம் வாய் புற்றுநோயானது 34 - 44 வயதுக்கு இடைப்பட்ட நபர்களிடையே 34% உம், 65-74 வயதுக்கு இடைப்பட்ட நபர்களிடையே 47.7% உம், வெற்றிலை சாப்பிடுவதன் மூலம் ஏற்படுவதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கையின் நகர்வாழ் மக்களுடன் ஒப்பிடுகையில் கிராமப் புறங்களில் வாழுகின்ற மக்கள் வெற்றிலை சாப்பிடும் பழக்கத்தை அதிகம் கொண்டுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டிலே இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட தொற்றாத நோய்களுடன் தொடர்புடைய இடர் காரணிகள் பற்றிய கணக்கெடுப்பின் பிரகாரம் (STEPS survey) 18 - 69 வயதுக்கு இடைப்பட்ட வயதுவந்த ஆண்களில் ¼ இற்கும் மேற்பட்டோர் (26.0%) மற்றும் ஏறத்தாழ பெண்களில் **5%** ஆனவர்களும் புகையில்லா புகையிலை (Smokeless Tobacco) பாவனை பழக்கமுடையவர்களாக உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. இந்த அறிக்கையின் பிரகாரம் வயதுவந்தவர்கள் மத்தியில் புகையில்லா புகையிலை பாவனையானது அதிகம் காணப்படுவதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனினும், அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்புகளின் பிரகாரம் வணிக ரீதியான அல்லது தாமே தயாரித்துக் கொண்ட புகையில்லா புகையிலை மற்றும் பாக்கு சார்ந்த உற்பத்திகளின் பாவனை இளம் பராயத்தினரிடையே அதிகரித்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

வாய் புற்றுநோய் ஏற்படுவதற்கான அதிக வாய்ப்புள்ள நபர்கள் வாய் பரிசோதனை செய்து கொள்வதன் மூலம் ஆரம்பத்தில் வாய் புற்றுநோய் நிலையினையும் (OPMD) அவ்வாறே வாய் புற்று நோயின் ஆரம்ப நிலையை முன் கூட்டியே கண்டறிவதையும் இலகுபடுத்துகின்றது. வாய் புற்றுநோயை ஆரம்பத்திலே கண்டறிவதன் மூலம் சிகிச்சைகளின் வெற்றியளிக்கும் தன்மையினை அதிகரித்துக் கொள்வதற்கும், நோயாளர்களின் வாழ்க்கை நிலையினை மேம்படுத்திக் கொள்வதற்கும் வாய்ப்பாக அமைகின்றது.

சாரதிகள், தோட்டத் தொழிலாளர்கள், விவசாயிகள், கடற் தொழிலாளர்கள், வேலைத் தள மற்றும் ஏனைய தொழிலாளர்கள், கிராமிய மக்கள் ஆகியோரிடையே வாய் புற்று நோய் ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகம் உள்ளமையினால் அவர்களுக்கு ஆரம்ப வாய் புற்றுநோய் நிலைகள் (OPMD) மற்றும் வாய் புற்றுநோய் என்பன ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளன. அதனால் ஆரம்ப நிலை வாய் புற்றுநோய்த் தன்மை மற்றும் வாய் புற்றுநோய் தொடர்பான பரிசோதனைகளின் போது இம்மக்கள் சமூகம் தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டியமை முக்கியமானதாகும்.

வாய் புற்றுநோய் ஏற்படுவதற்கான அதிக வாய்ப்புள்ள நபர்களை கண்டறிவதற்காக மூன்று விதமான அளவுகோல்கள் கட்டியெழுப்பப்பட்டுள்ளதுடன், இந்நபர்களை வாய் புற்றுநோய் பற்றிய பரிசோதனைகளுக்காக பல் அறுவை சிகிச்சை மருத்துவர்களின் சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

**மூன்று விதமான அளவுகோல்கள்**

1. ஒரு நாளைக்கு மூன்று முறை அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகள் வெற்றிலை சாப்பிடுகின்ற நபர்கள்.
2. நாளொன்றுக்கு மூன்று முறைக்கு குறைவாக வெற்றிலை சாப்பிடுகின்ற மற்றும் அதற்கு மேலதிகமாக புகை பிடித்தல் மற்றும்/அல்லது மதுபான பாவனை பழக்கமுள்ள நபர்கள்.
3. வழக்கமாக பாபுல், பீடா, பான்பறாக், மாவா உள்ளிட்ட புகையிலை உற்பத்தி வகைகள் மற்றும்/ அல்லது பாக்கு சார்ந்த உற்பத்தி வகைகளை பாவிக்கின்ற நபர்கள்

ஆரம்ப சுகாதார அலுவலர்களுக்கு, ஆரம்ப வாய் புற்றுநோய் மற்றும் புற்று நோய் ஏற்படுவதற்கான அதிக வாய்ப்புள்ள நபர்களை கண்டறிவதற்கான அதிக வாய்ப்புக்கள் உள்ளமையினால், இதற்காக குடும்ப சுகாதார சேவை அலுவலர்களதும் (PHMs) மற்றும் பொது சுகாதார பரிசோதகர்களினதும் (PHI) சேவையினைப் பெற்றுக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. 2015 ஜூலை மாதம் 07 ஆம் திகதி நடைபெற்ற குடும்ப சுகாதாரம் பற்றிய தேசிய ஆலோசனைக் குழுவின் 19 வது கூட்டத்தில் இப்பணிக்காக குடும்ப சுகாதார சேவை பெண் அலுவலர்களின் (PHMs) சேவையினைப் பெற்றுக் கொள்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. குடும்ப சுகாதார சேவை அலுவலர்களையும் (PHMs) மற்றும் பொது சுகாதார பரிசோதகர்களையும் அவர்களது நாளாந்த இல்லங்களுக்கான வெளிக்கள பயணங்களின் போது இப்பணியினை மேற்கொள்ளக் கூடியதாக உள்ளமையினால் அதன் மூலம் அவர்களது நாளாந்த பணிகளில் எதுவித தடைகளும் ஏற்படாது.

வாய் புற்றுநோய் நிவாரணப் பணிகளை மேம்படுத்துவதற்கு ஏதுவாக அமைகின்ற ஆரம்ப வாய் புற்றுநோய் தன்மையுடைய நபர்களை இனங்காணல் மற்றும் வாய் புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டறிவதற்காக சுகாதார நிறுவனங்கள் மற்றும் சுகாதார பதவியணியினரின் பொறுப்புக்கள் மற்றும் கடமைகள் என்பன (இணைப்பு I) தனித்தனியாக இனங்காணப்பட்டுள்ளன.

குடும்ப சுகாதார சேவை அலுவலர்களதும் (PHMs) மற்றும் பொது சுகாதார பரிசோதகர்களினால் (PHI) அவர்களது நிரந்தர இல்லங்களுக்கான மற்றும் வெளிக்கள பயணங்களின் போது அல்லது

பொது மக்களை சந்திக்கின்ற ஏனைய சந்தர்ப்பங்களின் போது, மேற்படி மூன்று விதமான அளவுகோல்களின் பிரகாரம் ஆரம்ப வாய் புற்றுநோய் நிலை மற்றும் வாய் புற்றுநோய் ஏற்படுவதற்கான அதிக வாய்ப்புள்ள நபர்கள் ஆகியோரை இனங்காணுதல் வேண்டும். அவர்களிடம் வழங்கப்பட்டுள்ள பரிந்துரை படிவத்தை (இணைப்பு II) பயன்படுத்தி இந்நபர்களை மிகவும் அருகாமையில் உள்ள அரச மருத்துவமனையின் பல் அறுவை சிகிச்சை மருத்துவரிடம் அனுப்பி வைத்தல் வேண்டும். இந்த நோயாளர்களை அரச மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைப்பதற்கான மிகவும் பொருத்தமான நேரம் வார நாட்களில் மு.ப. 10.30 முதல் மு.ப. 11.30 வரை என இனங் காணப்பட்டுள்ளது. பல் மருத்துவ நிலையத்தின் நாளாந்த சிகிச்சை பணிகளில் ஏற்படுகின்ற தடைகளை குறைத்துக் கொள்ளல், சிகிச்சைக்காக அனுப்பப்படுகின்ற நபர்கள் சிகிச்சை நிலையத்தில் காத்திருக்க வேண்டிய காலத்தை குறைத்துக் கொள்ளல் என்பவற்றுக்காக இக்காலப் பகுதி இனங்காணப்பட்டுள்ளது.

பல் அறுவைச் சிகிச்சை மருத்துவர்கள் இந்நபர்களை "ஆரம்ப வாய் புற்றுநோய் நிலை முகாமைத்துவத்திற்கான வழிகாட்டல்" (Guideline for Management of OPMDs) இன் பிரகாரம் பரிசோதனைக்கு உட்படுத்தி நோய் நிலையினை கட்டுப்படுத்துதல் வேண்டும். தேவையான சந்தர்ப்பங்களில் இந்நபர்களை பரிந்துரை படிவத்தை (இணைப்பு III) பயன்படுத்தி நிபுணத்துவ வாய்வழி, மாக்ஸில்லோ.ஃபேஷியல் அலகிற்கு (OMF) பரிந்துரைத்து அனுப்பி வைத்தல் வேண்டும். அறுவை சிகிச்சை மருத்துவரிடம் பரிந்துரைக்கப்பட்ட அனைத்து நபர்களையும் அங்கு அனுப்பிய குடும்ப சுகாதார சேவை அலுவலர்கள் (PHMs) அல்லது பொது சுகாதார பரிசோதகர்கள் (PHI) அவ்வாறு பரிந்துரைத்த படிவத்தின் பின் பக்கத்தில் உள்ள மீள் பரிந்துரை படிவத்தை பயன்படுத்தி மீள அனுப்புதல் வேண்டும். (இணைப்பு II) இவ்வாறு அனுப்புவதை இலகுபடுத்துவதற்காக தேசிய புற்றுநோய் ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் (NCCP) ஊடாக ஏற்கனவே இலகுவான மாதிரிப் படிவ வகைகள் இரண்டு (இணைப்பு II மற்றும் III) சிறிய புத்தகங்களாக வழங்கப்பட்டுள்ளன.

1. ஆரம்ப சுகாதார சேவை அலுவலர்களினால் அதிக இடர்மிக்க நபர்களை பல் அறுவை சிகிச்சை மருத்துவரிடம் பரிந்துரைப்பதற்கான படிவம் மற்றும் மீள் பரிந்துரை படிவம் (இணைப்பு II).
2. பல் அறுவை சிகிச்சை மருத்துவர்களினால் நோயாளர்களை நிபுணத்துவ வாய்வழி, மாக்ஸில்லோ.ஃபேஷியல் அலகிற்கு (OMF) பரிந்துரைப்பதற்கான படிவம் மற்றும் மீள் பரிந்துரை படிவம் (இணைப்பு III).

இந்த பரிந்துரை படிவத்தின் பின் பக்கத்தில் உள்ள படிவத்தை பயன்படுத்தி பல் அறுவை சிகிச்சை மருத்துவர்களினால் குடும்ப சுகாதார சேவை அலுவலர்களதும் (PHMs)/ பொது சுகாதார பரிசோதகர்கள் (PHM/PHI) இடம் (இணைப்பு II) மீள் பரிந்துரை தகவல்களைப் பெற்றுக் கொடுத்தல் வேண்டும். அவ்வாறே இணைப்பு III இல் உள்ள மீள் பரிந்துரை படிவத்தைப் பயன்படுத்தி வாய்வழி, மாக்ஸில்லோ.ஃபேஷியல் (OMF) அலகில் பணியாற்றுகின்ற பல் அறுவை சிகிச்சை மருத்துவர்களினால் நோயாளர்களை பரிந்துரைத்த பல் அறுவை சிகிச்சை மருத்துவரிடம் மீள் பரிந்துரைத் தகவல்களைப் பெற்றுக் கொடுத்தல் வேண்டும்.

இலங்கையில் காணப்படுகின்ற வாய் புற்றுநோய் அனர்த்தத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு வசதியளிப்பதற்கும் மற்றும் ஒருங்கிணைப்பு செய்வதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சகல மாகாண மற்றும் பிராந்திய சுகாதார அதிகாரிகளுக்கும் ஆலோசனை வழங்கப்படுகின்றது.

இது பற்றிய மேலதிக விளக்கங்கள் தேவைப்படின் தயவு செய்து பணிப்பாளர், தேசிய புற்றுநோய் ஒழிப்புத் திட்டம் அல்லது அதன் நிபுணத்துவ சமூக பல் அறுவை சிகிச்சை மருத்துவருடன் தொடர்பு கொள்ளவும். (தொ.பே. இல: 0112368627).

Dr. Anil Jasinghe
Director General of Health Services
Ministry of Health, Nutrition & Indigenous Medicine,
"Suwasiripaya"
385, Rev Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10.

**டாக்டர் அனில் ஜாசிங்க**
**சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்**

பிரதிகள்:
- பிரதிப் பணிப்பாளர் நாயகம், (பொதுச் சுகாதார சேவைகள் I மற்றும் II)
- பிரதிப் பணிப்பாளர் நாயகம், (தொற்றாத நோய்கள் பணியகம்)
- பிரதிப் பணிப்பாளர் நாயகம், பல் மருத்துவ சேவைகள்
- பணிப்பாளர், தேசிய புற்றுநோய் ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டம்
- பணிப்பாளர், தாய் சேய் சுகாதாரம்
- பணிப்பாளர், தொற்றாத நோய்கள்
- பணிப்பாளர், பல் மருத்துவ சேவைகள்
- பணிப்பாளர், ஆரம்ப சுகாதார சேவைகள்

## இணைப்பு:

| இணைப்பு இல. | மாதிரி படிவம்/ அறிக்கையின் பெயர் | தயாரித்தவர் யார் என்பது பற்றி | யாருக்கு பரிந்துரை செய்யப்பட்டது என்பது பற்றி | தகவல் மூலம் | கால எல்லை |
|---|---|---|---|---|---|
| இணைப்பு I | சுகாதார சேவைகள் தாபன மற்றும் சுகாதார பதவியணியின் பெறுப்புகளும் கடமைகளும் | - | - | - | - |
| இணைப்பு II | ஆரம்ப வாய் புற்றுநோய் நிலை மற்றும் வாய் புற்றுநோயுக்கான அதிக வாய்ப்புள்ள நபர்களை பல் அறுவை சிகிச்சை மருத்துவர்களிடம் அனுப்பி வைப்பதற்காக ஆரம்ப சுகாதார பணியாளர்களினால் பயன்படுத்துகின்ற பரிந்துரை படிவம் மற்றும் மீள் பரிந்துரை படிவம் | **பரிந்துரை செய்தல்** குடும்ப சுகாதார சேவை அலுவலர்கள் (PHMs')/ பொது சுகாதார பரிசோதகர்கள் (PHI) | பல் அறுவை சிகிச்சை மருத்துவர்கள் | - | அதிக இடர் தன்மைமிக்க நபர்களை இனங்கண்டதன் பின்னர் |
| | | **மீள் பரிந்துரை செய்தல்** பல் அறுவை சிகிச்சை மருத்துவர்கள் | குடும்ப சுகாதார சேவை அலுவலர்கள் (PHMs')/ பொது சுகாதார பரிசோதகர்கள் (PHI) | - | |
| இணைப்பு III | பல் அறுவை சிகிச்சை மருத்துவர்களினால் நோயாளர்களை வாய்வழி, மாக்ஸில்லோ.˙.பேஷியல் அலகிற்கு (OMF) பரிந்துரைப்பதற்கான படிவம் மற்றும் மீள் பரிந்துரை படிவம் | **பரிந்துரை செய்தல்** பல் அறுவை சிகிச்சை மருத்துவர்கள் | வாய்வழி, மாக்ஸில்லோ.˙.பேஷியல் (OMF) அறுவை சிகிச்சை மருத்துவ நிபுணர்/ அந்த அலகில் பணியாற்றுகின்ற பல் அறுவை சிகிச்சை மருத்துவர்கள் | - | |
| | | **மீள் பரிந்துரை செய்தல்** வாய்வழி, மாக்ஸில் லோ.˙.பேஷியல் (OMF) அறுவை சிகிச்சை மருத்துவ நிபுணர்/ அந்த அலகில் பணியாற்றுகின்ற பல் அறுவை சிகிச்சை மருத்துவர்கள் | பல் அறுவை சிகிச்சை மருத்துவர்கள் | - | |
| இணைப்பு IV | வாய் புற்றுநோய் மற்றும் ஆரம்ப வாய் புற்றுநோய் நிலையுடன் கூடிய புதிய நோயாளர்களின் பதிவு பற்றிய ஆவணம் | பல் அறுவை சிகிச்சை மருத்துவர் | - | - | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இணைப்பு V | புதிதாக கண்டறியப்பட்ட வாய் புற்றுநோய் மற்றும் ஆரம்ப வாய் புற்று நோய் நிலையுடன் கூடிய நபர்கள் பற்றிய பல் அறுவை சிகிச்சை மருத்துவர்களின் மாதாந்த அறிக்கை | பல் அறுவை சிகிச்சை மருத்துவர் | பிராந்திய பல் அறுவை சிகிச்சை மருத்துவர் | வாய் புற்றுநோய் மற்றும் ஆரம்ப வாய் புற்று நோய் நிலையுடன் கூடிய புதிய நோயாளர்களின் பதிவு பற்றிய ஆவணம் | அதன் பின்னர், மாதத்தின் 5 வது நாள் அல்லது அந்நாளுக்கு முன்னர் |
| இணைப்பு VI | புதிதாக கண்டறியப்பட்ட வாய் புற்றுநோய் மற்றும் ஆரம்ப வாய் புற்றுநோய் நிலையுடன் கூடிய நபர்கள் பற்றிய பிராந்திய பல் அறுவை சிகிச்சை மருத்துவர்களின் காலாண்டு அறிக்கை | பிராந்திய பல் அறுவை சிகிச்சை மருத்துவர் | பணிப்பாளர், தேசிய புற்றுநோய் ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டம் | புதிதாக கண்டறியப்பட்ட வாய் புற்றுநோய் மற்றும் ஆரம்ப வாய் புற்றுநோய் நிலையுடன் கூடிய நபர்கள் பற்றிய பல் அறுவை சிகிச்சை மருத்துவர்களின் மாதாந்த அறிக்கை | அதன் பின்னர், காலாண்டின் ஆரம்ப மாதத்தில் 25வது நாள் அல்லது அந்நாளுக்கு முன்னர் |

## இணைப்பு I

**சுகாதார சேவைகள் நிறுவனங்களின் மற்றும் சுகாதாரப் பதவியணியினரின் பொறுப்புகளும் கடமைகளும்**

### தேசிய புற்று நோய் ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் பொறுப்புகள் (NCCP)

- வெகுசன தொடர்பு ஊடகங்கள் மற்றும் ஏனைய தொடர்பாடல் முறைகளைப் பயன்படுத்தி ஆரம்ப வாய் புற்றுநோய் நிலை மற்றும் வாய் புற்றுநோய் தொடர்பான அதனுடன் தாக்கம் செலுத்துகின்ற இடர் காரணிகள் பற்றி பொது மக்களுக்கு விழிப்பூட்டுவதை உறுதிப்படுத்தல்.
- ஆரம்ப சுகாதாரப் பதவியணியை பயிற்றுவித்தல். சுகாதாரத் துறையுடன் தொடர்புடைய பிரிவுகளுக்குரிய பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவித்தல் (TOT) மற்றும் வெளிக்கள அலுவலர் மட்டத்திலான பதவியணியினர் வரையில் ஒழுங்கு முறையாக பயிற்சிகள் வழங்கப்படுவதை உறுதிப்படுத்தல்.
- பிரதிப் பணிப்பாளர் நாயகம் (பல் மருத்துவ சேவைகள்), பிரதிப் பணிப்பாளர் நாயகம் (தொற்றாத நோய்கள் பணியகம்), பணிப்பாளர் (குடும்ப சுகாதார பணியகம்), பணிப்பாளர் (சுகாதார மேம்பாட்டுப் பணியகம்), பணிப்பாளர் (ஆரம்ப சுகாதார சேவைகள்), பொது சுகாதார சேவைகள் பரிசோதகர் மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய பிரிவுகள், சுகாதார அமைச்சின் மாகாண மற்றும் மாவட்ட மட்டத்திலான பதவியணியினர், வாய்வழி சுகாதாரத் துறை நிபுணர்கள் ஆகியோருடன் வாய் புற்றுநோய் தடுப்பு மற்றும் ஆரம்பத்தில் கண்டறிதல் தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்தல்.
- இலங்கையில் வாய் புற்றுநோய் தடுப்பு மற்றும் ஆரம்பத்தில் கண்டறிவதற்கான பூரண நிகழ்ச்சித் திட்டத்தையும் அமுல்படுத்துவதை உறுதிப்படுத்தல், திட்டமிடல், ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் கண்காணித்தல்.
- நோய் பரிசோதனைகளுக்காக பரிந்துரை செய்யப்படுகின்ற நபர்கள் மற்றும் நோய் நிர்ணயிக்கப்பட்ட நோயாளர்கள் பற்றிய தரவுகள் கிடைத்தல், தரவுகளை உரியவாறு தயாரித்தல் மற்றும் தரவுப் பகுப்பாய்வு செய்வதை உறுதிப்படுத்தல்.
- சுகாதார நிறுவனங்கள் மற்றும் சுகாதார மருத்துவ அதிகாரி வலயங்களுக்கு தேவையான பொருட்களை வழங்குவதற்கான வழங்கல் பணிகளை முகாமைத்துவம் செய்தல்.

### மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பொறுப்புகள் (PDHS)

- பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர்கள், மாகாண சமூக பல் அறுவை சிகிச்சை மருத்துவ நிபுணர்கள் மற்றும் பிராந்திய பல் அறுவை சிகிச்சை மருத்துவர்கள் ஆகியோர் அடங்கலாக சுகாதார அமைச்சின் மாவட்ட மட்டத்திலான பதவியணியினர் வாய் புற்றுநோய் நிவாரணம் மற்றும் ஆரம்பத்தில் கண்டறிதல் பற்றிய நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் ஒருங்கிணைப்புப் பணிகள்.
- மாகாண மட்டத்தில் நிகழ்ச்சித் திட்டங்களை கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

### பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் (RDHS) கடமைகள்

- பிராந்திய பல் அறுவை சிகிச்சை மருத்துவர் மற்றும் மாவட்ட சுகாதார மருத்துவ அதிகாரிகள் உட்பட மாவட்ட மட்டத்திலான சுகாதார பதவியணியினருடன் வாய் புற்றுநோய் ஒழிப்பு மற்றும் ஆரம்பத்தில் கண்டறிதல் பற்றிய நிகழ்ச்சித் திட்டத்தை ஒருங்கிணைப்புச் செய்தல்.
- மாவட்ட மட்டத்தில் வாய் புற்றுநோய் நிவாரணம் மற்றும் ஆரம்பத்தில் கண்டறிதல் பற்றிய நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்தல், கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
- பல் மருத்துவ சிகிச்சை நிலையங்களுக்கு வாய்வழி பரிசோதனைகளை மேற்கொள்வதற்குத் தேவையான வசதியளித்தல்.

### மாகாண சமூக பல் அறுவை சிகிச்சை நிபுணத்துவ மருத்துவரின் (CCD) பொறுப்புக்கள்

- பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர்கள், சமூக மருத்துவ நிபுணர்கள், பிராந்திய பல் அறுவை சிகிச்சை மருத்துவர்கள், மருத்துவ அதிகாரிகள் (தொற்றாத நோய்கள்) மற்றும் சுகாதார மருத்துவ அதிகாரிகள் உள்ளிட்ட சுகாதார அமைச்சின் மாவட்ட மட்டத்திலான பதவியணியுடன் வாய் புற்றுநோய் நிவாரணம் மற்றும் ஆரம்பத்தில் கண்டறிதல் நிகழ்ச்சித் திட்டத்தை ஒருங்கிணைப்புச் செய்தல்.
- தேசிய புற்றுநோய் ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டம் மற்றும் சுகாதார அமைச்சின் மாவட்ட மட்டத்திலான பதவியணியுடன் இணைந்து தமது மாகாணத்தினுள் ஆரம்ப சுகாதார பதவியணிக்கு வாய் புற்றுநோய் நிவாரணம் மற்றும் ஆரம்பத்தில் கண்டறிதல் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்தலும் வெளிக்கள மட்டத்திலான அலுவலர்கள் வரையில் ஒழுங்கு முறையாக பயிற்சியளிக்கப்படுவதை உறுதிப்படுத்தலும்
- மாகாணத்தினுள் ஆரம்ப வாய் புற்றுநோய் நிலை/ வாய் புற்றுநோய் மற்றும் அதன் இடர் காரணிகள் என்பன பற்றி சமூகத்திற்கு விழிப்பூட்டப்படுவதை உறுதிப்படுத்தல்.
- மாவட்டத்துடன் தொடர்புடைய பிராந்திய பல் அறுவை சிகிச்சை மருத்துவர்கள், சுகாதார மருத்துவ அதிகாரிகள், பல் அறுவை சிகிச்சை மருத்துவர்கள் மற்றும் ஆரம்ப சுகாதார சேவை மருத்துவ பதவியணி ஆகியோருடன் இணைந்து ஆரம்ப வாய் புற்றுநோய் நிலை மற்றும் வாய் புற்றுநோய் பற்றிய அதிகம் நோய் ஏற்படக் கூடிய நிலையில் காணப்படுகின்ற நபர்களை இலக்காகக் கொண்டு அவர்களுக்கு அது பற்ய விளக்கமளித்தல் மற்றும் அந்நபர்களின் ஆரம்ப வாய் புற்றுநோய் நிலை அல்லது வாய் புற்றுநோய் தொடர்பான பரிசோதனைகளை மேற்கொள்ளும் நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கு செய்தல்.
- பரிசோதனைக்காக பரிந்துரை செய்யப்பட்ட நோயாளர்கள் பற்றிய தரவுகள் மற்றும் இனங்காணப்பட்ட நோயாளர்கள் பற்றிய தரவுகள் என்பவற்றினைத் தயாரித்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல் என்பவற்றினை மாகாண மட்டத்தில் மேற்கொள்ளல் மற்றும் இது பற்றி தேசிய புற்றுநோய் ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டத்துடன் ஒருங்கிணைப்புச் செய்தல்.
- ஆரம்ப வாய் புற்றுநோய் நிலை மற்றும் வாய் புற்றுநோய் நிலை என்பவற்றுக்கு தாக்கம் செலுத்தும் இடர் காரணிகள் பற்றி மாகாண மட்டத்தில் கணக்கெடுப்புகளை நடாத்துதல்.
- மாகாண மட்டத்தில் இந்நிகழ்ச்சித் திட்டத்தை கண்காணித்தலும் மதிப்பீடு செய்தலும்.

**பிராந்திய பல் அறுவை சிகிச்சை மருத்துவரின் (RDS) பொறுப்புக்கள்**

- மாவட்ட மட்டத்தில் வாய் புற்றுநோய் நிவாரணம் மற்றும் ஆரம்பத்தில் கண்டறிதல் நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்தல்.
- சுகாதார மருத்துவ அதிகாரிகள் உள்ளிட்ட மாவட்ட மட்டத்திலான சுகாதாரப் பதவியணியுடன் வாய் புற்றுநோய் தடுப்பு மற்றும் ஆரம்பத்தில் கண்டறிதல் நிகழ்ச்சித் திட்டத்தை ஒருங்கிணைப்புச் செய்தல்.
- ஆரம்ப சுகாதாரப் பதவியணியினரினால் பரிந்துரை செய்யப்படுகின்ற அதிக இடர் தன்மைமிக்க நபர்களை பரிசோதனை செய்வதற்காக பிரதேசத்திலுள்ள பல் அறுவை சிகிச்சை மருத்துவர்களுடன் ஒருங்கிணைப்புச் செய்தல்.
- வாய் புற்றுநோயை தடுத்தல் மற்றும் ஆரம்பத்தில் கண்டறிதல் நிகழ்ச்சித் திட்டத்தை தொற்றாத நோய்கள் பரிசோதனை நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடக்குவதற்காக மாவட்ட மருத்துவ அதிகாரியுடன் (தொற்றாத நோய்கள்) ஒருங்கிணைப்புச் செய்தல்.
- பல் அறுவை சிகிச்சை மருத்துவர்கள், மருத்துவ அதிகாரிகள், பதிவு செய்யப்பட்ட மருத்துவ அதிகாரிகள், ஆரம்ப சுகாதாரப் பதவியணி ஆகியோருக்கு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்கான ஒருங்கிணைப்புப் பணிகள்.
- தமது மாவட்டத்தினுள் படிவங்கள், ஆவணங்கள் மற்றும் அறிக்கைகளை வழங்குதல் மற்றும் விநியோகித்தல் என்பன போதிய அளவில் இடம்பெறுவதை உறுதிப்படுத்தல்.
- மாவட்டத்தைச் சேர்ந்த பல் அறுவை சிகிச்சை மருத்துவர்கள் மற்றும் ஆரம்ப சுகாதாரப் பதவியணி ஆகியோருடன் ஒருங்கிணைப்பினை செய்வதன் ஊடாக மாவட்ட மட்டத்தில் அதிக இடர் தன்மைமிக்க நிலையில் உள்ள நபர்களை பரிசோதனை செய்தல் மற்றும் இலக்காகக் கொள்ளப்பட்டுள்ள விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றினை ஏற்பாடு செய்தல்.
- பிராந்திய பல் அறுவை சிகிச்சை மருத்துவர் மற்றும் பிரதேச பல் அறுவை சிகிச்சை மருத்துவர்கள் ஆகியோருடன் ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொள்வதன் ஊடாக ஆரம்ப சுகாதார பதவியணியினால் பரிந்துரை செய்யப்படுகின்ற அதிக இடர் தன்மைமிக்க நிலையில் உள்ள நபர்களை பல் அறுவை சிகிச்சை மருத்துவரினால் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதை உறுதிப்படுத்தல்.
- அரசாங்க பல் அறுவை சிகிச்சை மருத்துவரினால் சிபாரிசு செய்யப்படுகின்ற மாதாந்த அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு ஆரம்ப வாய் புற்றுநோய் மற்றும் வாய் புற்றுநோயுடைய புதிய நோயாளர்களின் காலாண்டு அறிக்கையை (இணைப்பு IV) தயாரித்து பணிப்பாளர், புற்றுநோய் ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்கும், அதன் பின்னர் காலாண்டின் முதலாவது மாதத்தின் 25வது தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

**சுகாதார மருத்துவ அதிகாரிகள் (MOH) பொறுப்புக்கள்**

- வாய் புற்றுநோய் நிவாரணம் மற்றும் ஆரம்பத்தில் கண்டறிதல் நிகழ்ச்சித் திட்டத்தை சுகாதார மருத்துவ அதிகாரி பிரதேச மட்டத்தில் அமுல்படுத்தல்.
- வாய் புற்றுநோய் நிவாரணம் மற்றும் ஆரம்பத்தில் கண்டறிதல் நிகழ்ச்சித் திட்டத்தை சுகாதார மருத்துவ அதிகாரியின் பதவியணியுடன் ஒருங்கிணைப்புச் செய்தல்.
- பிராந்திய பல் அறுவை சிகிச்சை மருத்துவர் மற்றும் பிரதேசத்தின் பல் அறுவை சிகிச்சை மருத்துவர்கள் ஆகியோருடன் ஒருங்கிணைப்புச் செய்வதன் ஊடாக ஆரம்ப சுகாதார சேவைகள் பதவியணியினால் பரிந்துரைக்கப்படுகின்ற அதிக இடர் நிலையில் உள்ள நபர்களை பல் அறுவை சிகிச்சை மருத்துவரினால் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதை உறுதிப்படுத்தல்.
- பல் அறுவை சிகிச்சை மருத்துவ அதிகாரிகள், பதிவு செய்யப்பட்ட மருத்துவ அதிகாரிகள் மற்றும் ஆரம்ப சுகாதார பதவியணி ஆகியோருக்கு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படுவதை ஒருங்கிணைப்புச் செய்தல்.

**பொது சுகாதார தாதிச் சகோதரி (PHNS) / நிருவாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் (SPHI)/ நிருவாக குடும்ப சுகாதார சேவை அலுவலர் (SPHM) ஆகியோரது பொறுப்புக்கள்**

- சுகாதார மருத்துவ அதிகாரி, பல் அறுவை சிகிச்சை மருத்துவர்கள் மற்றும் ஆரம்ப சுகாதார பதவியணி ஆகியோருடன் இணைந்து சுகாதார மருத்துவ அதிகாரி மட்டத்தில் வாய் புற்றுநோய் நிவாரண மற்றும் ஆரம்பத்தில் கண்டறிதல் நிகழ்ச்சித் திட்டத்தினை ஒருங்கிணைப்புச் செய்தல்.
- சுகாதார மருத்துவ அதிகாரி பிரதேசங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள ஆரம்ப சுகாதார பதவியணிக்கு தேவையான அளவு பரிந்துரை படிவங்கள் கிடைக்கப் பெறுவதை கண்காணித்தல்.
- பிராந்திய பல் அறுவை சிகிச்சை மருத்துவருடன் ஒருங்கிணைப்புச் செய்வதன் ஊடாக சுகதார மருத்துவ அதிகாரி மட்டத்தில் அதிக இடர் நிலையில் காணப்படுகின்ற நபர்களை பரிசோதனை செய்யும் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் இலக்காகக் கொள்ளப்பட்டுள்ள விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்க்ள ஒழுங்கு செய்தல்.

**குடும்ப சுகாதார சேவை அலுவலர் (PHM) மற்றும் பொது சுகாதார பரிசோதகர் (PHI) ஆகியோரது பொறுப்புக்கள்**

- குடும்ப சுகாதார சேவைகள் அலுவலர் மற்றும் பொது சுகாதார பரிசோதகர் ஆகியோர் பிரதேச மட்டத்தில் வாய் புற்றுநோய் நிவாரண மற்றும் ஆரம்பத்தில் கண்டறிதல் நிகழ்ச்சித் திட்டத்தை மேம்படுத்தல்.
- ஆரம்ப வாய் புற்றுநோய் நிலைகள் மற்றும் வாய் புற்றுநோய்க்கான அதிக வாய்ப்புள்ள நபர்களை இனங்கண்டு சிகிச்சைக்கு பரிந்துரை செய்யும் படிவத்தை (இணைப்பு II) பயன்படுத்தி (இல்லங்களுக்கான மற்றும் வெளிக்கள பயணங்களின் போது) அவர்களுக்கு மிகவும் அருகாமையில் உள்ள அரச பல் அறுவை சிகிச்சை மருத்துவரிடம் அனுப்பி வைத்தல்.
- பரிந்துரை படிவத்தின் பிரதி ஒன்றை குடும்ப சுகாதார சேவை அலுவலர்/ பொதுச் சுகாதார சேவை பரிசோதகர் தம்மிடம் வைத்துக் கொள்ளல் வேண்டும்.
- சுகாதாரத்திற்கு தீங்கிழைக்கக் கூடிய பழக்கங்களை தடுத்துக் கொள்ளல் மற்றும் சுய வாய் பரிசோதனையின் முக்கியத்துவம் என்பன பற்றி பொது மக்களுக்கு விழிப்பூட்டல்.

- வாய் புற்றுநோய் தொற்றியுள்ளதாக உறுதிப்படுத்தியுள்ள நோயாளர்கள் மருத்துவமனைக்கு வருகை தராத பட்சத்தில் வெளிக்கள பயணத்தின் போது அவர்கள் பற்றிய பின்னூட்டல் பணிகளை மேற்கொள்ளல்.

**அரசாங்க மருத்துவமனைகளின் பல் அறுவை சிகிச்சை மருத்துவ அதிகாரிகளின் (Dental Surgeon) பொறுப்புக்கள்**

- பல் அறுவை சிகிச்சை நிலையத்திற்கு வருகை தருகின்ற அனைத்து நோயாளர்களது குறித்த சிகிச்சைக்கு மேலதிகமாக ஆரம்ப வாய் புற்றுநோய் நிலைகள் (OPMD) மற்றும் வாய் புற்றுநோய் என்பது பற்றி பரிசோதித்தல்.
- ஆரம்ப சுகாதாரப் பதவியணியினால் அல்லது சுயமாக ஆரம்ப வாய் புற்றுநோய் நிலைகள் மற்றும் வாய் புற்றுநோய் பற்றி பரிசோதிப்பதற்காக பரிந்துரை செய்யப்படுகின்ற நபர்களை முன்னுரிமை அளித்து பரீட்சித்தல் வேண்டும். (பரிசோதனை செய்வதற்காக வார நாட்களில் மு.ப. 10.30 முதல் மு.ப. 11.30 நோயாளர்களை அனுப்பி வைக்குமாறு ஆரம்ப சுகாதார பதவியணியினருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது).
- ஆரம்ப சுகாதார பதவியணியினால் அல்லது சுயமாக ஆரம்ப வாய் புற்றுநோய் நிலைகள் மற்றும் வாய் புற்றுநோய் என்பவற்றுக்காக பரிந்துரை செய்யப்பட்ட நபர்களின் வாய்வழி சுகாதார நிலையினை மேம்படுத்தல் மற்றும் மோசமான பழக்கங்களை தடுத்துக் கொள்ளல் பற்றி ஆலோசனை வழங்குதல்.
- "ஆரம்ப வாய் புற்றுநோய் நிலையினை தடுப்பதற்கான வழிகாட்டல்" இன் பிரகாரம் ஆரம்ப வாய் புற்றுநோய் நிலையுடன் கூடிய (OPMD) நபர்களின் நோய்த் தன்மையினை முகாமைத்துவம் செய்தல் வேண்டும். இந்த நோய் முகாமைத்துவ தரவுகளை மருத்துவ சிகிச்சையின் போது அல்லது மேலதிக சிகிச்சைக்கு தேவையான நோயாளர்கள் அந்த சிகிச்சைக்காக பரிந்துரை செய்யும் படிவத்தை (இணைப்பு III) பயன்படுத்தி வாய்வழி, மாக்ஸில்லோ.ஃ.பேஷியல் அலகிற்கு (OMF) அனுப்பி வைத்தல் வேண்டும் (பரிந்துரை படிவத்தின் பிரதி ஒன்றினை பல் சிகிச்சை நிலையத்தில் வைத்துக் கொள்ளல் வேண்டும்).
- வாய்வழி, மாக்ஸில்லோ.ஃ.பேஷியல் (OMF) அலகினால் மேற்கொள்ளப்படுகின்றன மீள் பரிந்துரை செய்தலின் போது வாய் சுகாதார நிலையினை மேம்படுத்தல் மற்றும் பின்னூட்டல் சிகிச்சை என்பவற்றுடன் தொடர்புடைய சிகிச்சை திட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளல் வேண்டும்.
- ஆரம்ப வாய் புற்றுநோய் நிலையானது புற்று நோய் ஒன்றாக மாறுவதை தடுக்கும் போது ஆரம்ப வாய் புற்றுநோயுடன் (OPMD) கூடிய நோயாளர்களின் வாய் சுகாதார நிலையினை மேம்படுத்த வேண்டியமை மிக முக்கியமான விடயமாக கருதப்படுகின்றது. எனவே, ஆரம்ப வாய் புற்றுநோய் நிலையுடன் (OPMD) கூடிய நோயாளர்களின், அந்நோய் நிலைக்குரிய சிகிச்சையினை ஆரம்பிப்பதற்கு முன்னர் அல்லது மேலதிக மருத்து சிகிச்சைக்காக வாய்வழி, மாக்ஸில்லோ.ஃ.பேஷியல் அலகிற்கு (OMF) அனுப்பி வைப்பதற்கு முன்னர், ஆரம்ப சிகிச்சை நிறுவனங்களின் பல் அறுவை சிகிச்சை மருத்துவர்களினால் அவர்களது வாய் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
- வாய் புற்றுநோய் மற்றும் ஆரம்ப வாய் புற்றுநோய் நிலையில் உள்ள புதிய நோயாளர்களின் பதிவு ஆவணமொன்று (இணைப்பு IV) சிகிச்சை நிலையத்தில் பேணி வருதல் வேண்டும்.

- அந்த பதிவு ஆவணத்தின் மாதாந்த சாராம்சம் ஒன்று (இணைப்பு V) பிராந்திய பல் அறுவை சிகிச்சை மருத்துவருக்கும், அதன் பின்னர் மாதத்தின் 5வது நாள் அல்லது அதற்கு முன்னரும் அனுப்பி வைப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
- மருத்துவமனை பல் சிகிச்சை நிலையத்தின் மாதாந்த அறிக்கை (H 1201 படிவம்) ஊடாக ஆரம்ப வாய் புற்றுநோய் நிலை (OPMD) பற்றி சம்பந்தப்பட்ட இடங்களுக்கு அறிவித்தல் வேண்டும்.
- மாகாண சுகாதார சேவை பணிப்பாளரின் கீழ் வராத பல் சிகிச்சை நிலையங்களுக்கு பொறுப்பான பல் அறுவை சிகிச்சை மருத்துவர்களினாலும் வாய் புற்று நோய் மற்றும் ஆரம்ப வாய் புற்று நோய் நிலைகளுடன் தொடர்புடைய அனைத்து விதமான ஆவணங்களையும் பேணி வருதல் வேண்டும். மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு இது பற்றிய அறிக்கையினை உரிய இடங்களுக்கு அனுப்பி வைத்தலும் வேண்டும்..

**மருத்துவ அதிகாரிகளின் பொறுப்புக்கள் (முக்கியமாக சுக வாழ்வு நிலையம் - HLC / வெளி நோயாளர் பிரிவு OPD, மருத்துவ அதிகாரிகளுக்குரியது)**

- வாய் புற்றுநோய்க்குரிய அதிக வாய்ப்பு உள்ளதை இனங்காண்பதற்கான மூன்று விதமான அளவுகோல்களின் பிரகாரம் அந்நபர்களை இனங் காணல் மற்றும் அவர்களை முறையான சிகிச்சை நிலைய வாய் பரிசோதனைக்காக, அருகாமையில் உள்ள அரச பல் சிகிச்சை நிலையத்திற்கு அனுப்பி வைத்தல்.
- சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் தேசிய புற்று நோய் ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் வெளியிடப்பட்ட “ஆரம்ப வாய் புற்றுநோய் நிலையினை கட்டுப்படுத்துவதற்கான வழிகாட்டல்” பரீட்சிப்பதன் மூலம் ஆரம்ப வாய் புற்றுநோய் நிலைகள் பற்றிய தொழில்நுட்ப ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளல்.
- ஆரம்ப வாய் புற்றுநோய் நிலை மற்றும் வாய் புற்றுநோயிற்கான அதிக வாய்ப்புள்ள நபர்களுக்கு அதற்குரிய ஆபத்தான பழக்கங்களை கைவிடுவதற்கு உதவுதல்.

**வாய்வழி, மாக்ஸில்லோ.ஃபேஷியல் நிபுணத்துவ அலகின் (OMF units) பொறுப்புக்கள்**

- வாய்வழி, மாக்ஸில்லோ.ஃபேஷியல் நிபுணத்துவ அலகிற்கு சிகிச்சைக்காக வருகை தருகின்ற ஆரம்ப வாய் புற்றுநோய் நிலை மற்றும் வாய் புற்றுநோயுடைய நோயாளர்களை சிகிச்சை நிலையத்தில் முகாமைத்துவம் செய்தல்.
- ஆரம்ப வாய் புற்றுநோய் நிலை மற்றும் வாய் புற்றுநோய் நோயாளர்களின் வாய் சுகாதார மேம்பாட்டிற்காக குறித்த பல் சிகிச்சை நிலையத்திற்கு நோயாளர்களை மீள அனுப்புதல் மற்றும் அது பற்றி பின்னூட்டல் செய்தல் (பல் அறுவை சிகிச்சை மருத்துவர் ஒருவரினால் நோயாளர் பரிந்துரைக்கப்பட்டிருப்பின் நோயாளர் கொண்டு வந்துள்ள அனுப்பி பரிந்துரை படிவத்தின் பின் பக்கத்தைப் பயன்படுத்தி மீள் பரிந்துரை செய்யும் பணியினை மேற்கொள்ளல் வேண்டும்).
- சமூக பல் மருத்துவ சுகாதாரம்/ வாய் சுகாதார நிவாரண அலகு உடன் இணைந்து ஆரம்ப வாய் புற்றுநோயுடைய நோயாளர்களின் மோசமான சுகாதார பழக்கங்களை தடுப்பதற்காக ஆலோசனை வழங்குதல் மற்றும் வாய் சுகாதார நிலையினை மேம்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்தல் (அந்த அலகு பிரதேசத்தில் இருப்பின்).
- புதிதாக கண்டறியப்பட்ட வாய் புற்றுநோயாளர்களின் தரவுகள் பற்றிய பதிவு ஆவணத்தை வாய்வழி, மாக்ஸில்லோ.ஃபேஷியல் நிபுணத்துவ அலகின் சிகிச்சை நிலையத்தில் பேணி வருதல். வருடாந்த

அறிக்கையினை பொது சுற்றறிக்கை இல. 01-33/2012 இன் பிரகாரம் பணிப்பாளர், புற்றுநோய் ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டம், பொதுச் சுகாதார கட்டிடத் தொகுதி, 555/5, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 05 இற்கு அனுப்புதல்.

**தனியார் துறையின் பல் அறுவை சிகிச்சை மருத்துவர்கள் மற்றும் மருத்துவ அதிகாரிகளின் பொறுப்புக்கள்**

- பல் மருத்துவர்/ மருத்துவ சிகிச்சை நிலையத்திற்கு வருகை தருகின்ற சகல நோயாளர்களதும் ஆரம்ப வாய் புற்றுநோய் நிலை மற்றும் வாய் புற்றுநோய் என்பன பற்றி பரிசோதித்தல்.
- ஆரம்ப வாய் புற்றுநோய் நிலை அல்லது வாய் புற்றுநோயுடன் கூடிய நோயாளர்களை மேலதிக சிகிச்சைக்காக அருகாமையில் உள்ள வாய்வழி, மாக்ஸில்லோ.ஃ.பேஷியல் நிபுணத்துவ அலகிற்கு (OMF units) அனுப்பி வைத்தல்.
- வெற்றிலை, புகையிலை அல்லது பாக்கு மற்றும் அதை அண்டிய உற்பத்திகளில் இருந்து தடுப்பதற்கு தேவையான ஆலோசனைகளை வழங்குதல்.

## இணைப்பு II

ஆரம்ப வாய் புற்றுநோய் நிலை மற்றும் வாய் புற்றுநோய்க்கான அதிக இடர் தன்மைமிக்க நபர்களை பல் அறுவை சிகிச்சை மருத்துவர்களிடம் பரிந்துரைப்பதற்காக ஆரம்ப சுகாதார பதவியணியினரால் பயன்படுத்துகின்ற படிவம்

| | | |
|---|---|---|
| මුඛ සෞඛ්‍ය පරීක්ෂණය සඳහා යොමු කිරීමේ පත්‍රිකාව<br>வாய் சுகாதாரப் பரிசோதனை சம்பந்தமான விண்ணப்பப்படிவம் | | දිනය / திகதி |
| සෞ. වෛ. නි. කොට්ඨාශය /சு.வை.அ.பிரிவு | ම.සෞ.ප. කොට්ඨාශය /பொ.சு.ப.பிரிவு<br>ප. සෞ. සේ. නි. කොට්ඨාශය/கு.சு.சே.நி.பிரிவு | |
| නම / பெயர்: | ස්ත්‍රී/பெண் ☐ | පුරුෂ/ஆண் ☐ |
| වයස/வயது: | ලිපිනය/<br>முகவரி: | දුර. අංකය/தொ. பே. இல. |
| යොමු කිරීමට හේතුව / பரிசோதனைக்காண காரணம் | | |
| බුලත්විට සැපීම/வெற்றிலை போடுதல் .......... ☐ | මද්‍යසාර භාවිතය/மது அருந்துதல் .................... ☐ | |
| දුම්පානය/புகைத்தல் .......................................... ☐ | වෙනත් /வேறு .......................................................... ☐ | |
| යොමුකළ නිලධාරියාගේ අත්සන<br>பரிந்துரை செய்யப்பட்ட வைத்தியரின் கையொப்பம் | යොමු වියයුතු රෝහල<br>செல்ல வேண்டிய வைத்தியசாலை | |

பல் அறுவை சிகிச்சை மருத்துவரினால் நிரப்ப வேண்டிய மீள் பரிந்துரை படிவம

**දන්ත වෛද්‍යවරයා සඳහා පමණි / பல் வைத்தியரின் உபயோகத்திற்கு மாத்திரம் (Back referral form)**

සායනික විනිශ්චය/பிணியாய்வு அவதாணிப்பு: ..............................................................................................

......................................................................................................................................................

වෛද්‍යවරයාගේ නිර්දේශය/வைத்திய பரிந்துரை: ..............................................................................................

......................................................................................................................................................

| | | | |
|---|---|---|---|
| නැවත පරීක්ෂා කිරීම:<br>மீள்பரிசோதணை | මාස 3ට පසු<br>3 மாதத்தின்பின் ☐ | මාස 6ට පසු<br>6 மாதத்தின்பின் ☐ | වසරකට පසු<br>ஒருவருடத்தின்பின் ☐ |

වෙනත් කරුණු /ஏனைய குறிப்பு: ..............................................................................................................

| | | |
|---|---|---|
| දන්ත ශල්‍ය වෛද්‍යවරයාගේ අත්සන ...............................<br>பல் வைத்தியரின் கை ஒப்பம் | රෝහල/ සායනය ............................................<br>வைத்தியசாலை/நிலையம் | දිනය ...........................<br>திகதி |

இணைப்பு III

பல் அறுவை சிகிச்சை மருத்துவர்களினால் நோயாளர்களை வாய்வழி, மாக்ஸில்லோ.ஃபேஷியல் அலகிற்கு (OMF Unit)) பரிந்துரைப்பதற்கான படிவம்

## Referral form to OMF Surgical Unit

| | | |
|---|---|---|
| Name of the patient: | | Male ☐ Female ☐ |
| Age: | Address: | Telephone number: |

Habits:

Betel Chewing ............................................ ☐ Consuming Alcohol ............................................ ☐

Smoking ............................................ ☐ Other ............................................ ☐

Reason for referral: ..........................................................................................................................

Dental Surgeon`s Signature .......................................... Hospital .................................................. Date ..........................

வாய்வழி, மாக்ஸில்லோ.ஃபேஷியல் அலகின் பல் அறுவை சிகிச்சை மருத்துவரினால் நிரப்ப வேண்டிய மீள் பரிந்துரை படிவம்

## To be filled by the dental surgeon at OMF Surgical Unit (For feedback)

Diagnosis: ..........................................................................................................................

Treatment plan: ..........................................................................................................................

..........................................................................................................................

To be reviewed in: 3/12 ☐ 6/12 ☐ 1 year ☐

Any comment: ..........................................................................................................................

Dental Surgeon`s Signature .......................................... Hospital .................................................. Date ..........................

இணைப்பு IV

வாய் புற்றுநோய் மற்றும் ஆரம்ப வாய் புற்றுநோய் நிலையுடன் கூடிய புதிய நோயாளர்களின் பதிவு பற்றிய ஆவணம்

Name of the Dental Surgeon ____________________ Year/Month ____________________

| Date | Regd No. | Patient's Name | Age/ Sex | NIC No. | Address | Site | Referred by | Clinical Diagnosis | Management | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | Treatment | Referred to |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |

இணைப்பு V

**புதிதாக கண்டறியப்பட்ட வாய் புற்றுநோய் மற்றும் ஆரம்ப வாய் புற்றுநோய் நிலையுடன் கூடிய நபர்கள் பற்றிய பல் அறுவை சிகிச்சை மருத்துவர்களின் மாதாந்த அறிக்கை**

*இந்த மாதாந்த அறிக்கையினை பல் அறுவை சிகிச்சை மருத்துவர் / கடமைக்குப் பொறுப்பான பல் அறுவை சிகிச்சை மருத்துவர் தயாரித்தல் வேண்டும். குறித்த அறிக்கையினை அதன் பின்னர் மாதத்தின் 05 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மாவட்டத்தின் பிராந்திய பல் அறுவை சிகிச்சை மருத்துவருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.*

| Year | | Month | | RDHS Division | | |
|---|---|---|---|---|---|---|
| Name of the Institution | | | | | | |
| Number of high-risk individuals referred by (based on the PHC referral booklet) | | PHC staff | MO | Self referral | Other | |
| | | | | | | |
| Number of high-risk individuals reported to the Dental Clinic | | | | | | |

**Information on indivials with OPMD/ suspected Oral Cancers**

| (Please refer the Register for new patients with Oral Cancer and Oral Potentially Malignant Disorders) | Referred by | | | | Total |
|---|---|---|---|---|---|
| | Self referral | PHC staff | GP | Other | |
| Total number of OPMDs detected at dental clinics | | | | | |
| Total number of suspected Oral Cancers detected at dental clinics | | | | | |

**Details of OPMD and suspected Oral Cancer detected at the Dental Clinic**

| Condition | | Male | Female | Total |
|---|---|---|---|---|
| 1 | Leukoplakia | | | |
| 2 | Erythroplakia | | | |
| 3 | Oral sub mucous fibrosis | | | |
| 4 | Oral lichen planus | | | |
| 5 | Other OPMDs | | | |
| Total number of OPMDs | | | | |
| Total number of suspected Oral Cancer | | | | |

| Special Remarks: |
|---|
| |

Name of the Dental Surgeon :………………………………………………

Date :…………………………

Signature :…………………………

**இணைப்பு VI**

**வாய் புற்றுநோய் மற்றும் ஆரம்ப வாய் புற்றுநோய் நிலையுடன் கூடிய நபர்கள் பற்றிய பிராந்திய பல் அறுவை சிகிச்சை மருத்துவர்களின் காலாண்டு அறிக்கை**

*இந்த காலாண்டு அறிக்கையினை பல் அறுவை சிகிச்சை மருத்துவர்களினால் தயாரித்த வாய் புற்றுநோய் மற்றும் ஆரம்ப வாய் புற்றுநோய் நிலையுடன் கூடிய புதிய நோயாளர்களின் மாதாந்த அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டே தயாரித்தல் வேண்டும்.*
*இந்த காலாண்டு அறிக்கையானது அடுத்த காலாண்டின் 25 ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர், புற்றுநோய் ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டம், பொதுச் சுகாதார கட்டிடத் தொகுதி, 555/5, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 05 இற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்*

Year ☐ ☐ Quarter 1 (Jan-March) ☐ Quarter 2 (April-June) ☐ Quarter 3 (July-Sept) ☐ Quarter 4 (Oct-Dec)

| RDHS Division | | Under RDHS Division | Line Ministry |
|---|---|---|---|
| No of dental clinics in the District | | | |
| No of dental clinics who send all 3 retruns at the end of the quarter | | | |

**Information on high-risk individuals**

| Number of high risk individuals referred to the dental clinics by PHC staff during the quarter (Based on the PHC referral booklet) | PHC staff | MO | Self | Other | Number of high-risk individuals reported to the Dental Clinic during the quarter | |
|---|---|---|---|---|---|---|

**Details of OPMD and suspected Oral Cancer detected at the Dental Clinic**

| | OPMD Type | Male | Female | Total | | OPMD Type | Male | Female | Total |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | Leukoplakia | | | | 5 | Other OPMDs | | | |
| 2 | Erythroplakia | | | | 6 | Total No of OPMD's | | | |
| 3 | Oral sub mucous fibrosis | | | | 7 | Total No of suspected Oral Cancer | | | |
| 4 | Oral lichen planus | | | | | | | | |

| (Please refer the Register for new patients with Oral cancer and Oral Potentially Malignant Disorders) | Referred by | | | | Total |
|---|---|---|---|---|---|
| | Self referral | PHC staff | MO | Other | |
| Total number of OPMDs detected at dental clinics | | | | | |
| Total number of suspected oral cancers detected at dental clinics | | | | | |

Special Remarks:

Name of the RDS : ……………………………………………………………………………………………………

Date : ……………………………………

Signature : ……………………………………